# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு

1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளி லிருந்து



**தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறாரா? ஆம். அவர் துரிதமாக பதிலளிக்கிறாரா? எல்லா நேரங்களிலுமல்ல. அவர் அப்படி செய்கிறாரா? இல்லை. சில நேரங்களில் நம்மைக் காத்திருக்கச் செய்கிறார். அது சரியா? ஆனால் தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார்.**

*சகோ.வில்லியம் பிரன்ஹாம்*

செய்தி: மோசேயைக் குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 84



தனிமையாய் இருங்கள். பொது இடங்களில் நீ ஜெபிக்கிற தன்மையைக் காட்டிலும், நீ தனிமையாயிருந்து ஜெபிக்கிற ஜெபம் வித்தியாசமானதாய் இருக்கும். நீங்கள் எல்லோரும் தனிமையை நாட வேண்டும்; வெளியே சென்று, நீயும் கர்த்தரும் ஒருநாளில் அநேக முறை சந்திக்கிற உண்மையான ஒரு இரகசிய இடத்திற்குச் சென்று ஜெபியுங்கள்.



சகோ.வில்லியம்
பிரன்ஹாம்

செய்தி:
பரிசுத்தவான்
களுக்கு
ஒருவிசை
ஒப்புவிக்கப்பட்ட
விசுவாசம்,
55-0501, பத்தி
எண் E-8

ஜெபம் காரியங்களை மாற்றிப்போடுகிறது. ஜெபம் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கொண்டு செல்கிறது. ஜெபம் வியாதியஸ்தர்களை சுகம் பெற்றவர்களாய் மாற்றுகிறது; பாவிகளைப் பரிசுத்தர்களாக்குகிறது. அது ஜெபமே.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி:
விசுவாசம்,
56-0427,
பத்தி எண் E-5

**...ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் ஒரு அதிகாரமாவது பரிசுத்த வேதாகமத்திலிருந்து படிக்க வேண்டும்; பின் ஜெபிக்க வேண்டும். பாருங்கள்? எப்போதும் அதை செய்யுங்கள்.**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

**செய்தி: தேவன் தம்முடைய வரங்களைக் குறித்து சாட்சி பகருதல், 52-0713 E, பத்தி எண் E-11**



அன்பான நண்பர்களே, நான் உங்களுக்கு கூறுவது என்னவென்றால், முக்கியமான காரியங்களில் தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டிய சிறந்த வழி ஜெபமே. பாருங்கள்?



...ஒரு மனிதனுக்காக, அவனுடைய மனைவி ஜெபிக்கும் போது, தேவன் அம்மனிதன் மேல் அசைவாடுவார்; அல்லது அது போலவே ஒரு மனிதன் தன் மனைவிக்காக ஜெபிக்கும் போது, அவள் மீது தேவன் அசைவாடுவார்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



செய்தி: சகேயு, 58-0517, பத்தி எண் E-32

ஆனால், ஒரு உண்மையான, உண்மையான விசுவாசி, உண்மையாய் ஆவிக்குரியபடி கட்டப்பட்டிருப்பானானால், அவன் ஒவ்வொரு நாளும், தன்னுடைய பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பான், கர்த்தரிடத்தில் பேசுவான். அது சரியே.




சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: இராப்போஜனம், 62-0204, பத்தி எண் 96

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக தன் கால்களை முடக்கும்போது, அவனுக்குள் எத்தகைய வல்லமை இருக்கிறது என்பதை கிறிஸ்தவர்களே உணரவில்லை. அது எத்தகைய வல்லமை என்பதை – அவன் உணருவதில்லை.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



செய்தி: என் தூதனானவர் உனக்கு முன்பாக போவார், 53-0216

இயேசுவை உங்கள் வீட்டை விட்டு புறம்பாக்குவீர்கள் என்றால், குடும்ப ஜெபத்தை நிறுத்துவீர்களானால், வேதாகமம் வாசிப்பதை நிறுத்துவீர்களானால், உங்கள் வீடுகளில் இன்னும் இதுபோன்ற காரியங்களைச் செய்வீர்கள் என்றால், உங்கள் வீடுகளில் பிரச்சனைகள் வருவதைப் பார்க்கலாம்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: நீ இதை விசுவாசிக்கிறாயா?, 53-0906, பத்தி எண் E-72



...எந்த நேரத்திலும் பிசாசு உங்களை மேற்கொள்ள விரும்புவான். அவனுடைய ஆளுகைக்குள் உங்களைக் கொண்டு வர விரும்புவான். உங்களுடைய ஜெப வாழ்க்கையை முறித்துப் போடுவீர்களானால், சகோதரனே, நீ ஒன்றுமில்லாது ஆகி விடுவாய். அது சரியா.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



செய்தி:
ஜீவனுக்காக
தாகமா
யிருத்தல்,
57-0630,
பத்தி எண்
E-36

எல்லாமும் தாறுமாறாகிக் கொண்டு போகிறது, நாம் ஜெபத்தை நிறுத்த வேண்டும் என்பதற்கு எந்த அடையாளமும் இல்லை. எப்படியும் நாம் ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

**செய்தி:**
மோசேயை குறித்த போதனை, 56-0513, பத்தி எண் 84

**எங்கள் ஜெபங்களுக்கு பதில் கிடைப்பதை நாங்கள் பார்ப்பது வரையில், நாங்கள் ஜெபிப்பதை நிறுத்தாமல் இருப்போமாக. இதை அருளும், பிதாவே.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: எதிர்பார்ப்பு, 61-0207, பத்தி எண் 55

...உங்களுடைய பிள்ளைகளுக்காக ஜெபிப்பது, அதன் காரணமாகத்தான் உங்களுடைய பிள்ளைகள்... சீமாட்டிகளாகவும் பண்புள்ளவர்களாகவும், நாம் வாழ்கிற இந்தக் காட்டுமிராண்டித்தனமான உலகில், நேர்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: உன் வீட்டார்,
61-0808,
பத்தி எண்
E-23



ஒவ்வொரு நாளும் ஜெபியுங்கள். முதலாவது, அதைக் குறித்து தேவனிடத்தில் விசாரிக்காமல், துரிதமாக, அதிவேகமாக எந்த ஒரு முடிவையும் எடுக்காதீர்கள். ‘பிதாவே, நான் இதைச் செய்யட்டுமா?’ என்று அவரிடத்தில் கேளுங்கள். ‘நான் இதைச் செய்ய வேண்டும் என்பது உம்முடைய சித்தமா?’ என்று அவரைக் கேளுங்கள்.



**நாம் தினந்தோறும் ஜெபிக்கவில்லையென்றால், எல்லா நேரமும் இரத்தத்தின் கீழ் நம்மை வைக்கவில்லையென்றால், உன்னுடைய கிறிஸ்தவ அனுபவத்தில் உலர்ந்து போய், மரித்துவிடுவாய்.**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: நீ இதை விசுவாசிக்கிறாயா?,
50-0716, பத்தி எண் E-64





# உன்னுடைய விரைப்புத்தன்மையை (இறுமாப்புத் தன்மையை) ஜெபத்தினால் இனிமையாக்கு;

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: கேள்விகளும் பதில்களும் #4, 64-0830 E, கேள்வி எண் 405



செய்தி:
நீ இதை
விசுவாசிக்கி
றாயா?,
50-0115,
பத்தி எண்
E-25
உத்தமமமான
ஒவ்வொரு
ஜெபத்திற்கும்
தேவன்
பதிலளிக்கிறார்.
(அதை நான்
விசுவாசிக்கிறேன்.)
அவருடைய
சொந்த வழியில்
பதிலளிக்கிறார்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்


பாருங்கள், இப்போது முக்கியமான காரியம் என்னவென்றால், உன்னுடைய ஜெபம், உன்னுடைய முக்கியமான ஜெபம், நீண்ட ஜெபம் இவையனைத்தும் இரகசியமாகவே இருக்க வேண்டும். எல்லோரும் ஜெபியுங்கள்... ஒரு இரகசிய அறைக்குள் செல்லுங்கள். கதவை மூடுங்கள். பகல் முழுவதும், இரா முழுவதும் அல்லது இரண்டு மணிநேரம் அங்கே ஜெபிக்க விரும்புகிறாய், அங்கேயே ஜெபியுங்கள்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
செய்தி: சபை ஒழுங்கு, 63-1226, பத்தி எண் 165


செய்தி: மோசேயை குறித்த
போதனை, 56-0513, பத்தி
எண் 160
சகோ.வில்லியம் பிரன்ஹாம்
உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் ஜெபிக்கும் போது,
நீங்கள் ஜெபத்திற்குப் பதிலைப் பெறுகிறீர்கள்,
அப்போது உண்மையாகவே அதிக, அதிக
விசுவாசத்தைப் பெறுகிறீர்கள்.

...நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனாகவும், அதே சமயம் மனிதனுக்கு ஊழியஞ்செய்கிறவனாகவும் இருக்க முடியாது. ஆகவே பிரசங்க பீடம் எனக்கு சிறப்பாக அமைய வேண்டுமானால், நான் ஜெபத்திலேயே என்னுடைய நேரத்தைக் கழிக்க வேண்டும், தியானிப்பதிலும் கழிக்க வேண்டும்.



சகோ.வில்லியம்
பிரன்ஹாம்

செய்தி:
சாலமோனிலும்
பெரியவர்
ஒருவர் இங்கே
இருக்கிறார்,
58-0625, பத்தி
எண் E-3


சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
உன்னுடைய
நேரத்தையும்
சமயத்தையும்
ஜெபத்திற்காக
தியாகம் செய்.
உன்னுடைய
ஜீவியத்தை
தியாகம் செய்.
செய்தி: எதிர்பார்ப்பு,
61-0207, பத்தி எண்
E-63

இப்போது இருக்கிற குழப்பமான சூழ்நிலையில், அமெரிக்காவிற்கு தேவைப்படும் சிறந்த ஆயுதம் என்னவென்றால், அது கர்த்தருக்குப் பயப்படுதலும், ஜெபிக்கிற ஜனங்களும் வேண்டும். அதுதான் சிறந்தது. அது நம்மால் உற்பத்தி செய்யக் கூடிய பீரங்கிகள், குண்டுகள் இவைகளை விட அதிக விலை மதிப்புள்ளது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: காணக் கூடாதவைகளை நோக்கிப்பார்த்தல், 50-0816, பத்தி எண் E-4


ஜெபத்திற்காக
விடப்படும் ஓர்
அழைப்பு
1
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
அவர்கள்
பேசிய
செய்திகளி
லிருந்து